[4th November 1965

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த ஸ்தாபனத்தால் மட்டும் தான் சென்னை நகர மக்களுக்குப் பால் கிடைக்கிறது என்பதல்ல. தொத்து வியாதி ஏற்பட்டு மாடுகள் இறந்த காரணத்தினால் வழங்கும் பாலின் அளவு குறைந்தது. திரும்பவும் வேண்டிய அளவு உற்பத்தி செய்ய என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: மாதவரம் பால் பண்ணையில் நல்ல வசதிகள் இருக்கின்றன. டாக்டர் இருக்கிறார். இருந்தும் 300-க்கு மேற்பட்ட மாடுகள் இறக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி விசாரிக்க அரசாங்கம் ஏதாவது கமிட்டி போட்டதா? அது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதற்குக் கமிட்டியே தேவையில்லை. இது கோத்து நோய். இங்கே பரவிவிட்டது. பரவிவிட்டது என்று சும்மா இராமல், அரசாங்கத்தின் பொறுப்பில் காலனி இருக்கிற காரணத்தினால், ராஜ்யத்தில் இருக்கிற நிபுணர்கள் மட்டுமல்லாமல் உடனடியாக இந்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களைக்கூட வரவழைத்துச் சில தினங்கள் தங்கும்படி செய்து கவனிக்க ஏற்பாடு செய்தோம். நமது முயற்சிக் குறைவால் ஏற்பட்டதல்ல. அவர்கள் கண்டு பிடித்திருக்கக் கூடிய மருந்துகூட கொஞ்சம் பலஹீனமானது என்று அவர்கள் ஒத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையில் இப்போது எவ்வளவு மாடுகள் வைத்து வளர்க்க வசதி செய்யப்பட்டிருக்கிறது? இப்போது எவ்வளவு மாடுகள் இருக்கின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும். அங்கு இருக்கக்கூடிய வசதிகளைப் பரிபூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு இப்போது அங்கு மாடுகள் இல்லை.

Madurai Milk Project

* 278 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the probable time when the Madurai Milk Project is expected to be commissioned;

(*b*) the extent of work completed till date; and

(*c*) the balance of work, that remains to be carried out?

THE HON SRI V. RAMAIAH: (*a*) The Madurai Milk Project is expected to be commissioned by the middle of 1966.

(*b*) Construction of buildings for the two chilling centres at Srivilliputhur and Virudhunagar has been completed. Construction of buildings for the main dairy at Madurai is in progress. Service buildings, such as godowns, garage and office have been completed.

4th November 1965]

(c) Completion of the main dairy buildings, erection of plant and equipment in the Main Dairy and Chilling Centres and mechanical and electrical works are yet to be completed.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் சம்பந்தமான பாஸ்ட்யுரைஸேஷன் ப்ளாண்ட்ஸ், சில்லிங் ப்ளாண்ட்ஸ் முதலிய வெளி நாட்டிலிருந்து வரவேண்டியவைகள் பூர்ணமாக வந்து விட்டனவா? இல்லாவிட்டால் வருவதற்குத் தாமதம் ஏற்படும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் திட்டத்திற்கான எக்விப்மென்ட்ஸ் எல்லாம் வந்து விட்டன.

கூட்டுறவு பால் வழங்கும் சொஸைட்டி, பாராசூர்.

*279 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், பாராசூர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுப் பால் வழங்கும் சொஸைட்டி சரிவர நடைபெறாமல் இருப்பது குறித்து அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : (a) Yes. The affairs of the Parasur Milk Supply Co-operative Society, Limited in the Cheyyar Taluk of North Arcot District being not satisfactory, an enquiry under Section 65 of the Madras Co-operative Societies Act of 1961 has been ordered into the constitution, working and financial condition of the Society.

(b) Further action to collect the Government dues and to set right the affairs of the Society will be taken on receipt of the enquiry report from the Enquiry Officer.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே. இந்த சொஸைட்டிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? எப்போது கொடுக்கப்பட்டது? நன்றாக நடைபெறவில்லை என்ற இந்தச் செய்தி எப்போது சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டது? சர்க்கார் எப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த சொஸைட்டிக்குத் தொகை கொடுத்தது 19—2—1963-ல் ரூ. 2,000 கொடுத்திருக்கிறோம். அந்தப் பணத்திலே ரூ. 600 வந்தாயிற்று. மீதம் வரவேண்டியது ரூ. 1,400 பிரின்ஸிபாலுக்கும், ரூ. 203·11 இண்டரஸ்டுக்கும். இந்தக் கணக்கு 30—6—1965 வரை. மற்ற விவரங்களுக்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.